# பனிமயம்

செப்டம்பர் 2022

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

“ஆண்டவர் நமக்கு **மாபெரும் செயல்** புரிந்துள்ளார்; அதனால் நாம் பெருமகிழ்ச்சியுறுகின்றோம்” (திபா 126:3) என்பதே கடந்த மாதத்தில் நம் திருத்தலம் வந்த அனைவரின் அனுபவமாக இருந்தது.

பனிமயத் தாயின் 440ஆம் ஆண்டுப் பெருவிழா நாம் விரும்பியதற்கும், வேண்டியதற்கும் மேலாகவே ஆசீர்வாதமாக அமைந்திருந்தது. பெருவிழாவின் 11 நாள்களிலும் ஆண்டவர் நல்ல காலச் சூழலைத் தந்தார். தமிழகம் முழுக்க மழை கொட்டித் தீர்த்தபோதிலும், பேராலய நிகழ்வுகளுக்கு மழையினால் எந்தப் பாதிப்பும் வரவில்லை.

பெருந்தொற்றின் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகள் பெருவிழாவை வழக்கம்போலக் கொண்டாட இயலவில்லை. அதற்கு ஈடு செய்வதுபோல, இந்த ஆண்டு பெருந்திரளாகத் திருப்பயணிகள் அன்னையின் திருத்தலம் நாடி வந்தனர். எல்லாத் திருநிகழ்வுகளும் ஆசீர்வாதமாக அமைந்திருந்தன.

பெருவிழாவின் முத்தாய்ப்பாக, மறைமாவட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அடுத்த ஆண்டு (05.08.2023) பனிமய அன்னையின் தங்கத் தேர் 16ஆம் முறையாக வலம் வரும் என்னும் மகிழ்ச்சிச் செய்தியை மக்களின் பலத்த ஆர்ப்பரிப்பின் நடுவே மேதகு ஆயர் அவர்கள் அறிவித்தார்கள்.

“நம்முள் வல்லமையோடு செயல்படுபவரும் **நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக** அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவுளுக்கே” (எபே 3:20) நன்றியும், புகழும் உரித்தாகுக!

நம் பனிமய அன்னை நமக்காகப் பரிந்து மன்றாடி, இன்னும் புதிய ஆசிகளை நமக்குப் பெற்றுத் தருவாராக!

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 23 தாரகை 1

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### மரணதண்டனை ஒழிக்கப்பட...

மனிதரின் மாண்பைத் தாக்கும் மரணதண்டனை ஒவ்வொரு நாட்டிலும் சட்டப்பூர்வமாக ஒழிக்கப்பட வேண்டும் என்று மன்றாடுவோம்.

# உள்ளே...

1. எருசலேம் நோக்கிய துயரத்தின் பயணம் ........................4
அருள் மரி வேந்தன்

2. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்.........6
செல்வராஜ் மிராந்தா

3. மரியன்னைப் புனிதர்கள்
இறையடியார் பெத்ரோ அருப்பே.........................................8
அருள்பணி. குமார்ராஜா

4. வாழ்ந்து காட்டிய மாமனிதர்கள்
செவாலியர் J.L.P. ரோச் விக்டோரியா............................10
கலாபன் வாஸ்

5. பனிமய அன்னை -
தங்கத் தேர்ப் பவனி .........................................................12
தி. சொர்ணராஜன் விக்டோரியா

6. மாதம் ஒரு மாதா படம் .....................................................15

7. நம் திருச்சபை, நமது பெருமை
பண்பாட்டுப் பாதுகாவலி!...................................................16
"க்றிஸ் மிலியன்"

8. விவிலியப் போட்டி ...........................................................18

9. பனிமயப் பகிர்வு ...............................................................21

10. பனிமய சாட்சியம்.............................................................25

# எருசலேம் நோக்கிய துயரத்தின் பயணம்!



நம் வாழ்வே ஒரு பயணம்தான். அந்த வாழ்வுப் பயணத்திற்குள்ளே இன்னும் பல பயணங்களை நாம் மேற்கொள்ளுகிறோம். அவை அனைத்துமே நமக்குப் பல பாடங்களைக் கற்றுத் தரும் ஏடுகளாக அமைகின்றன.

அன்னை மரியாவின் வாழ்விலும் பல பயணங்கள் இருந்தன. அவற்றில் எருசலேம் நோக்கி அவர் சென்ற பயணங்கள் துயரத்தின் பயணங்களாக அமைந்துவிட்டன.

**எருசலேம் என்றாலே துயரம்தான்.** இஸ்ரயேல் மக்களின் தலைநகர்தான் எருசலேம். இருப்பினும், அந்த மாநகர் இறைவாக்கினர்களுக்கும், நேர்மையாளர்களுக்கும் துயர்தரும் நகராகவே இருந்தது. எனவேதான், இயேசு "எருசலேம் நகரை நெருங்கி வந்ததும் அதைப் பார்த்து **அழுதார்**" (லூக் 19:41) என்னும் வியத்தகு செய்தியை லூக்கா நூலில் வாசிக்கிறோம். காரணம், இயேசு எருசலேமின் கடந்த கால வரலாற்றை நன்கு அறிந்திருந்தார். "எருசலேமே, எருசலேமே, **இறைவாக்கினரைக் கொல்லும் நகரே!** உன்னிடம் அனுப்பப்பட்டோரைக் கல்லால் எறிகிறாயே! கோழி தன் குஞ்சுகளைத் தன் இறக்கைக்குள் கூட்டிச் சேர்ப்பதுபோல நானும் உன் மக்களை அரவணைத்துக்கொள்ள எத்தனையோ முறை விரும்பினேன்; உனக்கு விருப்பமில்லையே" (லூக் 13:34) என்று புலம்பினார். மேலும், "இறைவாக்கினர் ஒருவர் எருசலேமுக்கு வெளியே மடிவது என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாதே" (லூக் 13:33) என்றும் சொன்னார்.

**இயேசுவும் எருசலேமும்.** எருசலேமில்தான் தமது பாடுகளும், இறப்பும் நிகழவிருக்கின்றன என்பதை இயேசு தமது ஞானத்தாலும், மறையறிவினாலும் அறிந்திருந்தார். இருப்பினும், அவரது பணிவாழ்வு முழுவதுமே எருசலேம் நோக்கிய ஒரு பயணம் என்பதே உண்மை. இதை உணர்ந்திருந்த லூக்கா "இயேசு நகர்கள், ஊர்கள் தோறும் கற்பித்துக்கொண்டே **எருசலேம் நோக்கிப் பயணம்** செய்தார்" (லூக் 13:22) என்று பதிவு செய்துள்ளார்.

மேலும், எருசலேமில் இயேசுவுக்கு என்ன நிகழும் என்பதையும் அவர் தமது சீடருடன் பகிர்ந்துகொள்ளத் தவறவில்லை. எனவேதான், "இயேசு பன்னிருவரையும் தம் அருகில் அழைத்து, அவர்களிடம், "இப்பொழுது நாம் எருசலேமுக்குச் செல்கிறோம்; மானிட மகனைப் பற்றி இறைவாக்கினர் வாயிலாக எழுதப்பட்டவை யாவும் நிறைவேறும்" (லூக் 18:31) என்று சொன்னதாக லூக்கா எழுதியுள்ளார். அதே செய்தியை மத்தேயு நற்செய்தியாளர் இன்னும் விளக்கமாக, "இப்பொழுது நாம் எருசலேமுக்குச் செல்கிறோம். மானிட மகன் தலைமைக் குருக்களிடமும், மறைநூல் அறிஞர்களிடமும் ஒப்புவிக்கப்படுவார். அவர்கள் அவருக்கு **மரண தண்டனை** விதிப்பார்கள்" (மத் 20:18) என்று எழுதியுள்ளார். அதுதான் எருசலேமில் நடந்தது.

**பவுலடியாரும் எருசலேமும்.** பவுல் தர்சு நகரில் பிறந்தவராக இருந்தாலும், எருசலேமில்தான் வளர்ந்தார் (திப 22:3). இருப்பினும், அவர் நற்செய்திப் பணியாற்றத் தொடங்கியபிறகு, எருசலேமில்தான் அதிக நெருக்கடிகளைச் சந்தித்தார். எபேசு நகரிலிருந்து எருசலேமுக்குப் பயணமாகும்போது, அங்கிருந்த மூப்பர்கள் "பவுலை எருசலேமுக்குச் செல்ல வேண்டாமெனக் கெஞ்சிக் கேட்டுக்" (திப 21:12) கொண்டார்கள். பவுலோ "நீங்கள் அழுது ஏன் என் உள்ளத்தை உடைக்கிறீர்கள்? நான் ஆண்டவர் இயேசுவின் பெயருக்காக எருசலேமில் கட்டப்படுவதற்கு மட்டுமல்ல, சாவதற்கும் தயார்" (திப 21:13) என்றார். இவை அனைத்துமே எருசலேமுக்குப் பயணம் செய்வது துன்பங்களைச் சந்திப்பதற்கு இணை என்று காட்டுகின்றன.

**மரியாவின் எருசலேம் பயணங்கள்.** அன்னை மரியா பலமுறை எருசலேமுக்குப் பயணமாகச் சென்றிருப்பார். "ஆண்டுதோறும் இயேசுவின் பெற்றோர் பாஸ்கா விழாவைக் கொண்டாட எருசலேமுக்குப் போவார்கள். இயேசுவுக்குப் பன்னிரண்டு வயது ஆனபோது, வழக்கப்படி விழாவைக் கொண்டாட **எருசலேம் சென்றனர்**" (லூக் 2:41-42) என்று எழுதியுள்ளார் லூக்கா. இந்தப் பயணம் நிச்சயமாக அன்னை மரியாவுக்குத் துயரம் தந்தது. காரணம், சிறுவன் இயேசு காணமல் போய்விட்டார். மூன்று நாள்களுக்குப் பிறகே அவரை எருசலேம் கோவிலில் கண்டுபிடித்தார்கள். இந்த மூன்று நாள்களும் மரியா அடைந்த வேதனையை நாம் கற்பனை செய்துகொள்ளலாம்.

அதன்பின்னர், இயேசுவின் பொது வாழ்வின்போதும் மரியா திருப்பயணமாக எருசலேம் சென்றிருப்பார். அவை பதிவு செய்யப்படவில்லை. ஆனால், இயேசுவின் பாடுகள், இறப்பின்போது அவர் எருசலேமில் தான் இருந்தார் என்பதை நற்செய்தியாளர்கள் எழுதிவைத்துள்ளனர். குறிப்பாக, சிலுவையடியில் நின்று தம் மகன் அனுபவித்த துன்பங்களை நேரில் கண்டு, அவரும் சொல்லொணாத் துயரடைந்தார்.

அன்னை மரியாவின் எருசலேம் நோக்கிய பயணங்கள் துயர் வருவித்தவையாக இருந்தாலும், மரியா கலங்கிவிடவில்லை, புலம்பவுமில்லை என்பது நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம். இன்னும் சொல்லப் போனால், துன்பங்களை எவ்வாறு எதிர் கொள்வது என்பதற்கு மூன்று பாடங்களை மரியன்னையிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம்.

**1. துன்பங்கள் வழியாகக் கடவுளுக்குக் கீழ்ப்படிவோம்.** இயேசுவைப் பற்றிப் பெருமையாகப் பேசும் எபிரேயர் திருமடல் "அவர் இறைமகனாயிருந்தும், துன்பங்கள் வழியே **கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்**" (எபி 5:8) என்கிறது. ஆம், அன்னை மரியாவும் எல்லாத் துன்பங்களின் வழியாக இறைத் திருவுளத்திற்குப் பணிந்து நடக்கக் கற்றுக் கொண்டார்.

**2. துன்பங்கள் வழியாக நிலைத்து நிற்போம்.** ஆண்டவரது திருமலையில் தங்கி வாழ்வோரின் பண்புகளுள் ஒன்றாக "தமக்குத் துன்பம் வந்தாலும், கொடுத்த வாக்குறுதியை மீறார்" (திபா 15:4) என்கிறது திருப்பாடல் 15. அன்னை மரியா அனைத்துத் துன்பங்களின் நடுவிலும், "நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) என்ற வாக்குறுதியில் நிலைத்து நின்றார். நாமும் அவ்வாறே நடக்க முயல்வோம்.

**3. துன்பங்கள் வழியாக இறைமாட்சியில் பங்கு கொள்வோம்.** துன்புறும் இறையடியாரைப் பற்றிய இறைவனின் வாக்குறுதி என்ன? "அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன். அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன்" (திபா 91:15). ஆம், அன்னை மரியாவைக் கடவுள் உயர்த்தி விண்ணக, மண்ணக அரசியாக முடிசூட்டினார்.

நம் வாழ்க்கைப் பயணத்தில் துன்ப நிகழ்வுகள் தவிர்க்க இயலாதவை. அந்நேரங்களில் துன்பங்களை நாம் எவ்விதம் எதிர்கொள்வது என்பதற்கு அன்னை மரியாவின் எருசலேம் நோக்கிய பயணங்கள் எடுத்துக்காட்டாய் உள்ளன.

**அருள் மரி வேந்தன்**

16



# பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...

1984ஆம் ஆண்டு முதல் 1987ஆம் ஆண்டு வரை அருள்திரு ஜான் சேவியர் அடிகளார் பரிசுத்த பனிமய மாதா ஆலயப் பங்குத் தந்தையாகவும் பசிலிக்கா அதிபராகவும் பணியாற்றினார்கள்.

பல வருடங்களுக்கு முன்பு அருள்தந்தை மணப்பாடு யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தையாக இருந்தபோது, கட்டுரையாளர் தன் தந்தைவழி குடும்ப வரலாற்றுச் செய்திகளைச் சேகரிக்கச் சென்று யாகப்பர் ஆலய திருமுழுக்குப் பதிவேடுகளைப் பார்வையிடக் கேட்டதும், ஆய்வுக்கு அவர் உதவிய பாண்மை இப்போது நினைவுக்கு வருகிறது. பார்வைக்கு சிறிது கறாரான மனிதர் போன்று தோன்றினாலும் பழகுவதற்கு எளிமையும் இனிமை கொண்டவர் என்பது அவரோடு பரிச்சயப்பட்டவர்களுக்குத்தான் தெரியும்.

அவரோடு அளவளாவியபோது அவருடைய பொது அறிவும் (General Knowledge) பழங்குடியியலில் செறிந்த அறிவும் (Anthropology) புலப்பட்டது. நூல்கள் பலதையும் நிரம்ப வாசித்தவர் என்பதையும் அறியலாம்.

அவருடைய மறைப்பணி மேய்ப்புக் காலத்தில் பனிமய மாதா பங்கில் எந்த விதமான அசம்பாவிதங்களும் நடந்ததாக செய்திகள் இல்லை. காரணம் எல்லோரோடும் பழகிய விதமும், யார் என்ன பிரச்சனையோடு சென்றாலும் அதைக் கேட்டு அவரால் இயன்ற மட்டும் தீர்த்து வைத்த முறைகளுமேயாகும்.

பங்கு மக்கள் பலரது வீடுகளுக்குச் சென்று விசாரிப்பதால் “உங்களில் நானும் ஒருவன்” என்ற உணர்வை ஏற்படுத்தியதால் மக்களும் அவரோடு மிகவும் சகஜமாகவே பழகினர். அதே போல் முறைகேடான காரியங்களில் மிகவும் கண்டிப்பாக இருந்தாலும் மனம் நோகும்படி சொல்லாமல் மிகவும் சுமூகமாகவே அவர்கள் செய்வதும் சொல்வதும் சரியல்ல என்று உணர்த்தும் சாமர்த்தியமான அணுகுமுறையைக் கையாண்டார். பல உதாரணங்களை மேற்கோள் காட்டலாம். ஆனால் சம்மந்தப்பட்ட ஆட்களின் பெயர்களைக் குறிப்பிட வேண்டும் என்பதால் தவிர்க்கப் படுகிறது.

அவர் பணியாற்றிய காலத்தில் பங்கின் ஆலயத்திலோ சிற்றாலயங்களிலோ எந்த விதமான திருப்பணிகளும் நடத்தப்பட்டதாகத் தகவல்கள் இல்லை. ஆனால் திருவழிபாடுகள் மிகச் சிறப்பாக நடந்ததாக அறிகிறோம்.

ஞாயிறு திருப்பலியின்போது மறையுரைகளில் மக்களிடம் ஒன்றைக் குறிப்பாகச் சொல்வாராம். “திருப்பலியில்



பங்கேற்கும் எல்லோரும் நற்கருணை உட்கொள்கிறீர்கள் - பார்க்க மகிழ்ச்சியாயிருக்கிறது. ஆனால் வாரத்தில் ஒருநாளாவது பாவசங்கீர்த்தனம் செய்வோர் அதிகம் இல்லையே ஏன்? நீங்கள் எல்லோரும் பாவமே செய்வதில்லையா?" என்று கேட்பாராம். ஆன்மீக காரியங்களில் மக்களை ஆற்றுப்படுத்துவதில் மிகவும் முனைப்பாக ஈடுபட்டார் என்று அறிகின்றோம்.

ஒரு பெரிய பங்குத் தளத்துக்கு வேண்டிய உள்கட்டமைப்புகள் அத்தனையும் இருப்பதால் மேற்கொண்டு நாம் கவனிக்க வேண்டியது கல்வி வசதிகள், தொழில் முனைவோருக்கு தேவையானவை, இவற்றிற்கெல்லாம் மேலாக மிக மிக முக்கியமானவை மக்களின் அடிப்படை கிறிஸ்தவ வாழ்வு. எனக்கு முன் இருந்தவர்கள் பெண்களுக்கென்றும் ஆண்களுக்கென்றும் இரண்டு கல்விச் சாலைகளை நிறுவிச் சென்றிருக்கிறார்கள். என் பணி உங்களை நல்ல கத்தோலிக்கர்களாக உருவாக்குவதுதான். நான் அதில் வெற்றி பெற்றேனா என்பது இறைவனுக்கே தெரியும் என்று இறுதியாக சொல்லிவிட்டு சென்றதாக முதியவர்கள் சிலர் தெரிவித்தார்கள்.

**செல்வராஜ் மிராந்தா**



57 மரியன்னைப் புனிதர்கள்

# இறையடியார் பெத்ரோ அருப்பே

(1907 - 1991)

## அன்னையின் வழிநடந்த இயேசு சபைத் தலைவர்!



இயேசு சபைக்குப் பல சிறப்புகள் உள்ளன. புனித லொயோலா இஞ்ஞாசியாரால் தோற்றுவிக்கப்பட்டு, இன்று உலகம் முழுவதும் பரவி நிற்கும் சபை அது. இன்றைய நாளில் மொத்தம் **14,439** இயேசு சபைத் துறவியர் உலகம் முழுவதும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். கத்தோலிக்கத் திருஅவையின் எண்ணிலடங்கா துறவற சபைகளுள் எண்ணிக்கையிலும், தாக்கத்திலும் மிகப் பெரிய துறவற சபை என்ற பெருமை அவர்களுக்குத்தான். புனித இஞ்ஞாசியார், புனித சவேரியார், புனித ராபர்ட் பெல்லார்மின், ஜான் பெர்க்மன்ஸ், பீட்டர் ஃபேபர், ஜான் தே பிரிட்டோ, பீட்டர் கிளாவர், அலாய்சியஸ் கொன்சாகா, ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா என்று நீளும் புனிதர்களின் கூட்டம் அனைத்தும் இயேசு சபையினரே.

இவர்களின் வரிசையில் புனித நிலைக்கு உயர்த்தப்படுவதற்கான படிநிலையில் "இறையடியார்" என்ற இடத்தில் நிற்பவர்தாம் ஸ்பெயின் நாட்டவரான அருள்தந்தை பெத்ரோ அருப்பே. இயேசு சபையின் 28ஆவது தலைவரான பெத்ரோ அருப்பே நம் காலத்தவர். 1965 முதல் 1983 முடிய 18 ஆண்டுகள் இயேசு சபையை வழிநடத்திய அவர் இறந்து 30 ஆண்டுகள்தான் ஆகின்றன. "இறையடியார்" நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ள அருப்பே விரைவில் அருளாளராகவும், பின்னர் புனிதராகவும் அறிவிக்கப் படுவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஸ்பெயின் நாட்டின் பில்பாவோ என்னும் இடத்தில் மார்சலினோ அருப்பே தம்பதியரின் ஐந்து குழந்தைகளில் கடைசி மற்றும் ஒரே மகனாக 1907ஆம் ஆண்டு பிறந்தார் பெத்ரோ. தந்தை கட்டிடப் பொறியாளர், செல்வம் மிக்கவர். எனவே, சிறந்த கல்வி பெற்றார். மருத்துவராக வேண்டும் என்னும் கனவோடு மாட்ரிட் நகரின் மருத்துவக் கல்லூரியில் பயின்றுகொண்டிருந்தார். ஆனால், எதிர்பாராத விதமாக, 1926ஆம் ஆண்டு அவரது 19ஆம் வயதில் தந்தை இறந்துவிட்டார். குடும்பமே அதிர்ச்சியிலும், சோகத்திலும் மூழ்கியது.

அதன்பின், மருத்துவப் படிப்பை நிறைவு செய்யாமல், 1927ஆம் ஆண்டு இயேசு சபையில் சேர்ந்தார். ஸ்பெயின் நாட்டில் நடந்து

கொண்டிருந்த கலவரங்களின் காரணமாக, தனது இறையியல் படிப்பை நெதர்லாந்து, பெல்ஜியம் நாடுகளில் பயின்றார். 1936ஆம் ஆண்டு குருவாக அருள்பொழிவு பெற்றார். பின்னர், அமெரிக்கா சென்று அங்கு மருத்துவ நெறியியலில் முனைவர் பட்டம் பெற்றார்.

மிஷனரியாகப் பணியாற்ற வேண்டும் என்னும் எண்ணம் பெத்ரோவின் உள்ளத்தில் பற்றியெரிந்துகொண்டிருந்தது. எனவே, ஜப்பான் அனுப்பப்பட்டார். இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலத்தில் ஜப்பானில்தான் பணியாற்றிக்கொண்டிருந்தார். 1945 ஆகஸ்ட் 6ஆம் நாள் ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்டபோது, விரைந்து சென்று மக்களுக்கு முதல் உதவி செய்து எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றினார். அதற்கு முன்னதாக, உளவு பார்க்கிறாரோ என்ற ஐயத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு 33 நாள்கள் சிறையிலும் இருந்தார். சிறை வாசம் தமக்கு அமைதி, பொறுமை, நம்பிக்கை, இறைத் திட்டத்திற்குப் பணிதல் போன்ற பல நற்பண்புகளைக் கற்றுத் தந்ததாக எழுதியுள்ளார்.

அவரது பணிகள் பலரையும் ஈர்க்கவே, ஜப்பான் நாட்டு இயேசு சபையின் மாநிலத் தலைவராக்கப்பட்டார். அவரது உலகளாவிய அனுபவமும், மொழி வளமும், பரந்த பார்வையும் அவரை இன்னும் உயரத்திற்கு இட்டுச் சென்றன. 1965ஆம் ஆண்டு இயேசு சபையின் 28ஆவது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1983 வரையில் தலைமைப் பணியாற்றினார். பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு 1991 பிப்ரவரி 5 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

தந்தை பெத்ரோ அருப்பே அன்னை மரியாவின்மீது மிகப் பெறும் பற்றுதல் கொண்டிருந்தார். குழந்தைப் பருவத்திலேயே அன்னை மரியா அவருக்குத் தாயாகி விட்டார். தனது எட்டு வயதிலேயே தாயை இழந்தார். அன்று அவரது தந்தை அன்னை மரியாவின் திருவுருவத்தைக் காட்டி "இனிமேல் இவரே உன் தாய்" என்று சொன்னார். அன்றிலிருந்து மரியாவின் வழித்துணை அவருக்குக் கிடைத்தது.

அவரது வாழ்வின் திருப்பு முனை நிகழ்வே மரியன்னைத் திருத்தலமான பிரான்ஸ் நாட்டு லூர்து திருத்தலத்தில்தான் நடந்தது. தந்தையின் இறப்புக்குப் பின்னர், ஆறுதலும், அமைதியும் பெறுவதற்காக நான்கு சகோதரிகளுடன் லூர்து திருத்தலம் சென்று மூன்று மாதங்கள் அங்கே தங்கினார். அங்கேதான் அருப்பேயின் வாழ்வில் திருப்புமுனை நிகழ்ந்தது. நற்கருணைப் பவனியின்போது, நடக்க இயலாமல் சக்கர நாற்காலியில் கொண்டு வரப்பட்ட ஓர் இளைஞன் வியத்தகு முறையில் நலம்பெற்றதைக் கண்ட அருப்பே மனிதர்களின் உடலை நலப்படுத்தும் மருத்துவப் பணியை விட்டுவிட்டு, ஆன்மாக்களை நலப்படுத்தும் துறவியாக மாறினார்.

இயேசு சபையின் நிறுவனர் புனித லொயோலா இஞ்ஞாசியாரின் மரியன்னை பக்தியை அடிக்கடி மேற்கோள் காட்டுவார் அருப்பே. இயேசு சபையினர் அனைவரும் அன்னையின் அன்புப் பிள்ளைகளாய் வாழவேண்டும் என்று ஆவல் கொர்ண்டிருந்தார். மரியாவை "இயேசு சபையின் தாய்" என்று அழைத்தார் அருப்பே. இயேசு சபையினரின் அர்ப்பண வாக்குறுதிகள் அனைத்தும் அன்னை மரியாவின் முன்னிலையில்தான் வழங்கப்படுகின்றன என்பது மரபு.

இளமை முதல் வாழ்வின் இறுதிவரையில் இயேசுவையும், அவரது தாய் மரியாவையும் பற்றிக்கொண்டே வாழ்ந்த இறையடியார் பெத்ரோ அருப்பே நமக்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறார்.



அருள்பணி. குமார்ராஜா

வாழ்ந்து காட்டிய மாமனிதர்கள் - 3

# செவாலியர் J.L.P. ரோச் விக்டோரியா



வாழும் மாந்தரெல்லாம், வையகம் தழைத்திருக்க வேண்டும் என்று வாழ்ந்து விட்டால், பூலோகத்திலேயே சொர்க்கத்தை அனுபவித்துவிடலாமே!

எதை எடுக்கலாம் - எதைப் பிடுங்கலாம் - எதை அபகரிக்கலாம் - எவ்வளவு கையூட்டு வாங்கலாம் என்று தவியாய்த் தவித்தலையும், அரசியல்வாதிகளைத்தான் நாம் பொதுவாகச் சந்திக்கிறோம்.

பட்டம் - பதவி என்று வந்துவிட்டால், பிச்சாண்டியாக இருந்தவர்கள்கூட, லஞ்ச லாவண்யத்தில் ஊறித்திளைத்து, ஒரு சில ஆண்டுகளிலேயே கோடீஸ்வரர்களாக, உச்சாணிக் கொப்பில் போய் உட்கார்ந்து விடுகிறார்கள்!

சந்தனமாகத் தன்னைத் தேயவிட்டு, மணம் பரப்பும் மாமனிதர்கள் ஒரு சிலர், எல்லாக் காலங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அத்தகைய வள்ளல்களால்தான் வையகம் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றால், அது மிகையாகாது.

* * *

சிறு பிள்ளைகளுக்கு, திருவிழா, கொட்டு மேளம், ஊர்வலம் என்றால் ஒரு குதூகலம் தானாகவே பிறக்கும்... சரியாகச் சொல்லப் போனால், ஏழு வயதில் அந்தப் பிரமுகரை, முதன் முதலாக, தூத்துக்குடி வடபாகம் புதுத் தெருவில், ஒரு சிறப்புக் கூட்டத்தில்தான் பார்த்தேன். அப்போது, அவர் யார் என்ற விபரம் எல்லாம் எனக்குத் தெரியாது.

சின்னப் பையன்களோடு அணி சேர்ந்து, அங்கே நடந்தவற்றைப் பார்த்தபோது, பலரும் தலையில் வெள்ளைத் தொப்பி (காந்தி குல்லா) அணிந்து இருந்தனர். மேடையில் சிலர் அமர்ந்திருந்தனர். அவர்களுக்குப் பின்புறம் சற்று உயரத்தில் சில படங்கள் திரையிடப்பட்டு மூடியிருந்தன..... மேடையில் இருந்தவர்களில் யாராவது ஒருவர் சற்று நேரம் பேசிவிட்டு, திரையிட்டு மூடியிருந்த படத்தைத் திறந்து வைப்பார்.

இதெல்லாம் என்ன என்று புரிந்துகொள்ள முடியாத சின்னஞ்சிறு பருவம்.... கூட்டத்தோடு இருந்து வேடிக்கை பார்த்ததோடு சரி! (அது சுதந்திரப் போராட்டக் காலம். காங்கிரஸ் கூட்டத்தில் தலைவர்கள் பேசுகிறார்கள் என்பதெல்லாம் தெரியாது).

அங்கேதான், அந்தப் பிரமுகரைப் பார்த்தேன்!

பனிமய மாதா திருவிழாக் காலங்களில், ஆலயத்திற்கு எதிரே கைத்தொழில் பொருட் காட்சி நடைபெறும். அங்கே, முகப்பில் நின்று கொண்டு யாருடனாவது பேசிக் கொண்டிருப்பார் அந்தப் பெரிய மனிதர்!.......... டிப் டாப்பாக (கோட்) சூட் அணிந்திருப்பார்!

ஆலயத்தில், பீடத்திற்கு அருகில் சென்று வழிபாடுகளில் பங்கேற்பதில் இருக்கிற சந்தோஷத்தைவிட வேறு எதுவும் உண்டா? அப்படியான வேளைகளில், பனிமய மாதா கோயில் திருப்பீடத்திற்கு முன், அவருக்கெனப் போடப்பட்டுள்ள ஆசனத்தில் அமர்வதைவிட, முழங்காலிட்டுச் செபிப்பதையே பார்த்திருக்கிறேன்.

நான் இன்னும் சற்று வளர்ந்த பிறகு, பள்ளிக் கூடத்தில் படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் போதும் (நானும் வாங்கியபோது) அவரைப் பார்த்திருக்கிறேன்.

நாடு சுதந்திரம் பெறுகிறது. தூத்துக்குடியில் இருந்து அந்த மாமனிதர் மீன்வளம் - உணவுத் துறை அமைச்சராகிறார்.

அப்போதும், அவருடைய பழைய வாழ்க்கை முறைகளிலிருந்து மாற்றமில்லாமல், அதே நிலையில் வாழ்கிறார். பழகுவதற்கு எளியவர் - ஏழை எளியவர்கள் மட்டில் ஈவு இரக்கம் - ஆன்மீகத்தில் அக்கறை - கரையேற முடியாத ஏழைக் குமர்களுக்கு, முகங்காணாத உதவி.

தூத்துக்குடியில் மிக நீண்டகால, 20 ஆண்டுகள் நகரத் தந்தையாக - சமூக நலப் பணியாளராக - சமுதாயத்தின் தூணாக - மாநில அமைச்சராக - இந்தப் பெருமகனார் ஆற்றிய அறப்பணிகள் ஏராளம். சாந்தம் தவழும் முகம் - அணுகுவதற்கு எளியவர் - சாதி மத பேதமின்றி அனைத்து மக்கள் மட்டிலும் அக்கறை காட்டியவர், கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்கள்.

இவரின் உன்னதமான மக்கள் சேவையைப் பாராட்டி - அங்கீகரிக்கும் வகையில், திருத்தந்தையினால் **‘செவாலியர்’** பட்டம் வழங்கப் பெற்றார். நற்கருணைப் பவனியின் போது, தேவநற்கருணைக்கு முன்னால், வாள் ஏந்தி வருவார் - நற்கருணைப் போர் வீரனாக.

தூத்துக்குடியில் இன்று சிறந்து விளங்கும் புதிய துறைமுகத்திற்கு வித்திட்டவர். தட்டப் பாறைப் பகுதியில் பெரியதொரு தொழிற் சாலையை உருவாக்கி, தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க இவர் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு, அரசியல் காலை வாரியது!

இவரைப் போன்ற தன்னலமற்ற தியாக சீலர்கள் - நேர்மையான தலைவர்கள் வேறு சிலரும் இவருடைய சமகாலத்தில் வாழ்ந்து, திருச்சபைக்கும், இந்த மாநகரத்திற்கும் பெருமை சேர்த்தார்கள்.

பேராளர்கள் மாசில்லாமணிப் பிள்ளை, ராவ் பகதூர் கயித்தான் வில்லவராயர், பொன்னுசாமி வில்லவராயர், ஜே.பி. ராட்ரீக்ஸ் போன்ற எத்தனையோ தலைவர்கள் இந்த மண்ணுக்கு மகிமை சேர்த்துள்ளார்கள்.

செவாலியர் - மாண்புமிகு அமைச்சர் என்ற சிறப்புகளெல்லாம், பேராளர் பெருந்தகை J.L.P. ரோச் விக்டோரியா அவர்களை, இன்னும் உன்னதமாக்கியதே அல்லாமல், நெறிபிறழச் செய்துவிடவில்லை. புகழோடு வாழ்ந்து, புகழ் மங்காது போற்றப்படும் ஒரு பொதுநிலையினர்.

இவரின் நினைவாக உள்ள ‘ரோச் பூங்கா’வையே பெயரிழக்கச் செய்யும் வகையில் அரசியல் விளையாடியபோது, அப்படி எதுவும் நடந்துவிடாமல் தடுத்து நிறுத்திய வரலாறு உண்டு!

இத்தகைய பெரியவர்கள் இந்த மண்டலத்தை மாண்புறச் செய்தபோது, இவர்களைக் காணும் பேறு பெற்றதில் பெருமிதம் கொள்கிறேன்.



**கலாபன் வாஸ்**
94863 90793

பனிமய அன்னை 23

# தங்கத் தேர்ப் பவனி

**தங்கத் தேர்ப் பவனி**

1. 2.2.1806 : மாதா சுத்திகரித்த திருநாள் அன்று
சாதித் தலைவர் : தொன் கபிரியேல் தெக்குரூஸ் வாஸ் கோமஸ் (தேர் மாறன்)

2. 5.8.1872 : பங்குக்குரு : சங். சில்வெஸ்டர் மஸ்கரனாஸ் (கோவா மிலின்)
சாதித் தலைவர் : தொன் கபிரியேல் தெக்குரூஸ் வாஸ் பல்தானா
சிறப்பித்தோர் : மயிலாப்பூர் ஆயர் மேதகு ஒர்னலாஸ்

3. 5.8.1879 : பங்குக்குரு : சங். மனுவேல் கொன்சியாஸ் கோயிலோ (கோவா மிலின்)
சாதித் தலைவர் : தொன் கபிரியேல் தெக்குரூஸ் வாஸ் பல்தானா
சிறப்பித்தோர் : அதி.சங். கசிமீர் கிறிஸோஸ்தோம் நசரேத் (கொச்சின்-கிரங்கனூர் மாநில அதிபர்)
(Very Rev. Fr. Casimir Chrysosthom Narzereth - Admr. of Cochin & Granganore)

4. 5.8.1895 : பங்குக்குரு : அதி. சங் J.N.X. மிஸ்குய்த்தே (கோவா மிலின்)
சாதித் தலைவர் : தொன் மிக்கேல் தெக்குரூஸ் லாசரூஸ் மோத்தா வாஸ்
சிறப்பித்தோர் : மயிலாப்பூர் ஆயர் மேதகு டோம் ஜோசா யஹன்றிக் ரீத் டி சில்வா (Jose Henirique Reed Da Silva, D.D., F.M.U.)

5. 5.8.1905 : **பனிமய அன்னையின் திருச்சுரூபம் தூத்துக்குடி வந்து 350 ஆண்டுகள் நிறைவு தங்கத் தேர் செய்வித்த 100-வது ஆண்டு**
பங்குக்குரு : அதி. சங். J.B.B. டிசொயிஸா
சாதித் தலைவர் : தொன் மிக்கேல் தெக்குரூஸ் லாசரூஸ் மோத்தா வாஸ்
சிறப்பித்தோர் : மயிலாப்பூர் ஆயர் மேதகு தியோதோனிசஸ் எம்மானுவேல் ரிபேரா வியேரா டி காஸ்ட்ரோ
(Theotonio Emmanuel Ribeiro Vieira de Castro, D.D., D.C.L.)

6. 5.8.1908 : பங்குக்குரு : அதி. சங். M.J. .பிண்டோ
சாதித் தலைவர் : தொன் மிக்கேல் தெக்குரூஸ் லாசரூஸ் மோத்தா வாஸ்
சிறப்பித்தோர் : மயிலாப்பூர் ஆயர் மேதகு தியோதோனிசஸ் எம்மானுவேல் ரிபேரா வியேரா டி காஸ்ட்ரோ
(Theotonio Emmanuel Ribeiro Vieira de Castro, D.D., D.C.L.)

7. 5.8.1926 : பங்குக்குரு : சங். C.C. பரோட்டோ
சாதித் தலைவர் : தொன் மனுவேல் லூயீஸ் தெக்குரூஸ் அனத்தாசியூஸ் மோத்தா கொரேரா
சிறப்பித்தோர் : மயிலாப்பூர் ஆயர் மேதகு தியோதோனிசஸ் எம்மானுவேல் ரிபேரா வியேரா டி காஸ்ட்ரோ
(Theotonio Emmanuel Ribeiro Vieira de Castro, D.D., D.C.L.)

8. **5.8.1947** : பங்குக்குரு : சங். T. பவுல் அலங்காரம்
சாதித் தலைவர் : தொன் மனுவேல் லூயீஸ் தெக்குரூஸ் அனத்தாசியூஸ் மோத்தா கொரேரா
சிறப்பித்தோர் : பெங்களூர் ஆயர் மேதகு தாமஸ் போத்தேகொமரி (Thomas Pothacamury), தஞ்சாவூர் பெரிய குரு மோன்சிஞ்ஞோர் மைக்கேல் மோத்தா வாஸ் (Msgr. Micheal Motha Vaz of Thanjavur)

9. **5.8.1955** : **பனிமய அன்னையின் திருச்சுரூபம் தூத்துக்குடி வந்து 400 ஆண்டுகள் நிறைவு**
பங்குக்குரு : அதி. சங். S.M. தல்மேய்தா
சிறப்பித்தோர் : தூத்துக்குடி ஆயர் மேதகு தாமஸ் பர்னாந்து, மதுரை பேராயர் மேதகு J. பீட்டர் லியோனார்ட் (Most. Rev. John Peter Leonard S.J.), மற்றும் கோட்டாறு பேராயர் மேதகு ஆஞ்ஞசாமி (Most. Rev. Thomas Roch Agniswamy S.J.)

10. **5.8.1964** : **அ) தூத்துக்குடி மேற்றராசன திரு இருதய ஆசன பேராலயத்தின் நூற்றாண்டு விழா;**
**ஆ) 38-வது அகில உலக நற்கருணை மாநாடு, பம்பாய்;**
**இ) மேதகு தாமஸ் ஆண்டகையின் குருத்துவ வெள்ளி விழா;**
**ஈ ) புனித சவேரியாரின் அழியாப் பொன்னுடல் திருக்காட்சி, கோவா**
பங்குக்குரு : அதி. சங். S.M. தல்மேய்தா
சிறப்பித்தோர் : தூத்துக்குடி ஆயர் மேதகு தாமஸ் பர்னாந்து

11. **5.8.1977** : **போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா நகரில் தேவதாய் மூன்று சிறுவர்களுக்கு காட்சி அளித்த 60-ம் ஆண்டு நிறைவு**
பங்குக்குரு : சங். ஜோப் டி ரோஸ்
சிறப்பித்தோர் : தூத்துக்குடி ஆயர் மேதகு M.அம்புரோஸ், மற்றும் திருச்சி ஆயர் மேதகு தாமஸ் பர்னாந்து

12. **5.8.1982** : **பனிமய அன்னையின் திருத்தல நான்காம் நூற்றாண்டு விழா**
பங்குக்குரு : சங். லாம்பர்ட் மிராண்டா
சிறப்பித்தோர் : தூத்துக்குடி ஆயர் மேதகு S.T. அமலநாதர், மற்றும் திருச்சி ஆயர் மேதகு தாமஸ் பர்னாந்து

13. **5.8.2000** : **யூபிலி ஆண்டின் நினைவு**
பங்குக்குரு : சங். ஜோசப் இரத்தினராஜ்
சிறப்பித்தோர் : திருத்தந்தையின் இந்திய தூதுவர் லொரன்சோ பல்திஸ்ஸேரி (Archbishop Lorenzo Baldisseri), தூத்துக்குடி ஆயர் மேதகு பீற்றர் பர்னாந்து, மற்றும் 15க்கும் மேற்பட்ட ஆயர்கள்.

14. 5.8.2007 : **அ) பனிமய அன்னையின் திருத்தல 425-வது ஆண்டு விழா**
**ஆ) பனிமய அன்னை பேராலய வெள்ளி விழா**
பங்குக்குரு : சங். ஜெரோசின் A. காற்றார்
சிறப்பிப்போர் : மதுரை பேராயர் மேதகு பீற்றர் பர்னாந்து
மயிலாப்பூர் ஆயர் மேதகு சின்னப்பா
பாண்டிச்சேரி ஆயர் மேதகு ஆனந்தராயர்
தூத்துக்குடி ஆயர் மேதகு யுவான் அம்புரோஸ், மற்றும்
தமிழக ஆயர்கள்.

15. 5.8.2013 : பங்குக்குரு : சங். வில்லியம் சந்தானம்
சிறப்பிப்போர் : தூத்துக்குடி ஆயர் மேதகு யுவான் அம்புரோஸ்

பனிமய அன்னையின் தங்கத்தேரை தமது பணிக்காலத்தில் இருமுறை வலம் வரச்செய்து சிறப்பு பெற்ற ஒரே பங்குத் தந்தை, அதி. சங். S.M. தல்மேய்தா சுவாமிகள்தான். வேம்பார் ஊரைச் சேர்ந்த இவர், பனிமய அன்னையின் ஆலய பங்குக் குருக்களில் அதிக காலம் (1954-1970) பங்குக் குருவாக பணி புரிந்தவர்.

**சித்திர விற்பன்னர்கள்**

பனிமய அன்னையின் அற்புத திருச்சுரூபத்தை தாங்கி, தூத்துக்குடி நகர் வீதிகளில் ஆடம்பரமாக பவனி வரும் தங்கத் தேரை அழகு செய்த சித்திர விற்பன்னர்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ளனர் :



| | |
|---|---|
| 2.2.1806 | நேவிஸ் பொன் சேக்கா |
| 5.8.1926 | அமிர்தம் மிராந்தா |
| 5.8.1944 | அமிர்தம் மிராந்தா |
| 5.8.1947 | லெடீயன்ஸ் வாஸ் |
| 5.8.1955 | எனேத் பூபாலராயர் |
| 5.8.1964 | A. பரதேசி பர்னாந்து |
| 5.8.1977 | S.M. பர்னாந்து |
| 5.8.1982 | K. ரெமி பர்னாந்து |
| 5.8.2000 | K. ரெமி பர்னாந்து |
| 5.8.2007 | T. மரிய சில்வெஸ்டர் பர்னாந்து |
| 5.8.2013 | T. மரிய சில்வெஸ்டர் பர்னாந்து |



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**

மாதம் ஒரு மாதா படம் : 32

# பாதுகாக்கும் அன்னை!





ஓவியர் ஜெயராஜ்

நம் திருச்சபை, நமது பெருமை - 11

*சென்ற இதழ் தொடர்ச்சி....*

# பண்பாட்டுப் பாதுகாவலி!

**5. தமிழ் மொழிக்கு திருஅவையின் தொண்டு.** தமிழ் மொழியின் வளர்ச்சிக்குக் கத்தோலிக்கத் துறவிகள் ஆற்றிய அளப்பரிய பணிகளை நாம் அறிவோம். தமிழகத்தின் முதல் அச்சகம் இயேசு சபைத் துறவிகளால் தூத்துக்குடி மறைமாவட்டம் புன்னைக்காயலில்தான் தொடங்கப்பட்டது என்பது நம்மவர் பலருக்குமே தெரியாது.



இராபர்ட் தே நொபிலி, வீரமாமுனிவர் இருவரின் சமயப் பணிகளுக்கு இணையாக விளங்கியது அவர்களின் தமிழ்த் தொண்டு. வெளிநாட்டவரான நொபிலி தமிழில் 15 நூல்கள் எழுதினார், தமிழ்-போர்ச்சுக்கீசிய அகராதியை உருவாக்கினார், பல புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்கினார் என்பது வியப்பும், பெருமிதமும் ஒருசேரத் தரும் செய்தி. வீரமாமுனிவர் தந்த தேம்பாவணி என்னும் காப்பியம் தமிழுக்கு அவர் செய்த மாபெரும் தொண்டு. நகைச்சுவை நிறைந்த பரமார்த்த குரு கதைகளை எழுதினார், சதுரகராதியை உருவாக்கினார்.



இருபது ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த திருவிவிலியம் - பொது மொழிபெயர்ப்பு திருஅவை தமிழுக்கு ஆற்றிய இன்னொரு தொண்டு எனலாம்.

பிற கிறித்தவ சகோதரர்கள் அனைவரும் இன்னும் வடமொழி தாக்கம் நிறைந்த "வேதாகம" நூலைப் பயன்படுத்தும்போது, நாம் மட்டுமே நல்ல தமிழில் இறைமொழியை வாசிக்கிறோம். தனித் தமிழ் கற்கவேண்டுமென்றால் திருக்குறள், திருவிவிலியம் இரண்டையும் வாசித்தாலே போதும் என்பது நமக்கு எத்துணை பெருமை!

தமிழில் வெளிவரும் கத்தோலிக்க இதழ்களைக் கணக்கெடுத்தால் தலை கிறுகிறுக்கும். அத்தனை வகைகள், அத்தனை இதழ்கள். இவை ஆயிரக்கணக்கான எழுத்தாளர்களை, வாசகர்களை மொழியியலில் வளர்க்கின்றன என்பதை மறைக்க இயலுமோ?

**6. நாட்டுப்புறக் கலைகள்.** மறைந்து கொண்டிருக்கும் நாட்டுப்புறக் கலைகளுக்குப் புத்துயிர் அளிக்கும் பணியில் திருஅவை உலகம் முழுவதும் பாடுபடுகிறது.

தமிழகத்தில் ஒயிலாட்டம், மயிலாட்டம், கரகாட்டம், தப்பாட்டம் போன்ற கலைகளை மீண்டும் மக்கள்முன் நிறுத்துவதில் கத்தோலிக்கக் கலைக் குழுக்கள் பெரும் பங்கு வகித்துள்ளன. அனைத்து மறை மாவட்டங்களிலும், துறவற அவைகளிலும் கலைக்குழுக்கள் இயங்குகின்றன.

பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் நாட்டார் வழக்கியல் துறை எனத்



தனித் துறையே இயங்குகிறது. மக்கள் கலைகளை வளர்த்தெடுப்பதும் ஓர் இறைத்தொண்டே என்பது நம்மவர்களின் நம்பிக்கை.

**7. சட்டமும், நீதித் துறையும்.** சட்டம், நீதித் துறை அமைப்புகளை உருவாக்கியதில் கத்தோலிக்கத் திருஅவைக்குப் பெரும் பங்குண்டு.



திருத்தந்தை ஏழாம் **கி**ரகோரியின் (**இ**றப்பு 1085) **கா**லத்தில்தான் **மு**தன்முதலாக **தி**ருச்சபைச் சட்டம் உருவாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, பல ஐரோப்பிய நாடுகளும் தங்களுக்கென சட்டங்களை ஏற்படுத்தின.

12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிராசியான் போன்ற துறவிகள் முதன்முதலாக சட்டரீதியான அமைப்புகளை ஏற்படுத்தினார்கள்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம், பன்னாட்டுச் சட்டங்கள், ஜுரிகள் முறையிலான விசாரணை, சந்தேகத்திற்கு இடமின்றிக் குற்றத்தை எண்பித்தல் போன்ற நுணுக்கமான சட்டக் கொள்கைகள் எல்லாம் கத்தோலிக்கத் திருஅவையின் நீதி பரிபாலனத்திலிருந்தே பிறந்தன என்பது வியப்பான தகவல்.

உலகின் பண்பாட்டு வளர்ச்சியில் தனிப் பங்களிப்பு ஆற்றியிருக்கும் நம் திருஅவை பற்றிப் பெருமை கொள்வோம். நாமும் பண்பாட்டு வளர்ச்சிக்குக் கை கொடுப்போம்.

"**க்றிஸ் மிலியன்**"

# விவிலியப் போட்டி 92

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**லூக்கா நற்செய்தி அதிகாரம் 1 - 3**

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. பெண்களுக்குள் நீர் __________ பெற்றவர்.
2. ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் __________ என்றார்.
3. வானதூதர் மரியாவுக்குத் தோன்றி __________ வாழ்க.
4. மரியா அஞ்ச வேண்டாம். கடவுளின் __________ கண்டடைந்துள்ளீர்.
5. உம் வயிற்றில் வளரும் __________ பெற்றதே.
6. __________ உம்மீது வரும்.
7. உன்னத __________ உம்மீது நிழலிடும்.
8. அவர் பெயர் __________.

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

---

**செப்டம்பர் 8 - அன்னையின் பிறப்பு :**
**விடைகளை கோர்த்தால் அன்னைக்குக் கிடைத்த மகுடங்கள் கிடைக்கும்.**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.08.2022**

## விவிலியப் போட்டி 91

**ஆகஸ்ட் 2022** விடைக்குறிப்புகள்

**லூக்கா : அதிகாரம் 4 - 10**

பொருத்துக :

| | | |
|---|---|---|
| 1. | கொடுக்கப்படும் | லூக் 11:19 |
| 2. | அதிகம் பேறுபெற்றோர் | லூக் 11:27 |
| 3. | யோனா | லூக் 11:30 |
| 4. | மன்னிப்பு பெறமாட்டார் | லூக் 12:10 |
| 5. | முதன்மையாவர் | லூக் 13:30 |
| 6. | திறக்கப்படும் | லூக் 11:9 |
| 7. | இறையாட்சிக்கு ஒப்பாகும் | லூக் 13:21 |
| 8. | மிகுதியாக கேட்கப்படும் | லூக் 12:48 |
| 9. | ஓய்வு நாளில் குணமடைதல் | லூக் 13:10 |
| 10. | ஒருநாள் கூலி | லூக் 15:18 |

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :

**93458 16875**

அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 138**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 81**

**விடை எழுதிய அன்பியங்கள் : 27**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. இராயப்பர் அன்பியம் **நேவிசம்மாள்**
2. சவேரியார் அன்பியம் **ரூபா மனுவேல்**
3. செபஸ்தியார் அன்பியம் **அந்தோனியம்மாள் டென்சிங்**
4. சிந்தாத்திரை அன்பியம் **டிஜேபிஆர் இராயன்**

**பாராட்டுக்குரியவர்கள் : 77**

1. அருள்சகோ. ரோசம்மாள்
2. அருள்சகோ. லீமா

**அந்தோனியார் அன்பியம்**

3. சரோஜா
4. பிருந்தா சார்லஸ்
5. ஜெயா
6. லூக்காஸ் சகாயம்

**அன்னை தெரசா**

7. ரெய்சா சுஜய்
8. சுகன் மோனிஷா
9. சுரேஷ் பிரேமா

**அன்னை வேளாங்கன்னி**

10. டென்சி
11. ரிஷாலின்
12. திவ்யா

**கிறிஸ்தரசர்**

13. ஸெலஸ்கி கிளமென்ட்
14. ரெக்ஸ் கிரீன்வெல்
15. இவாஞ்சலின்

**தஸ்நேவிஸ் மாதா**

16. இருதயம்மாள்

**திவ்யபாலன் அன்பியம்**

ஒருவருமில்லை

**பாத்திமா மாதா**

17. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
18. ஜெனிட்டா மைக்கேல்
19. டினிஸ்டன் மெரிசா

**இரக்கத்தின் மாதா**

20. சித்ரா மோத்தா
21. இருதயம்மாள் கொன்சால்

**ஜெபமாலை மாதா**

22. கல்யாணி செல்வராஜ்
23. சகாயம்மாள் பெனடிக்ட்
24. இருதயம்மாள் கபிரியேல்

**ஜூடு அன்பியம்**

25. டெரன்சியா அரிஸ்டோ
26. அந்தோனிசாமி
27. டிரைபேனா

**காவல்தூதர்**

28. வெனிட்டாள்
29. ஜெயா அகஸ்டின்
30. சாந்தி ஆல்ட்ரின்
31. ட்ரினிஷா
32. செகரியா இம்மானுவேல்

**குழந்தை தெரசா**

33. கிறிஸ்டி லிஸ்டன்
34. ஷோபனா கோமஸ்

**குழந்தை இயேசு**

35. மோனிகா செபாஸ்டின்
36. எமல்டா
37. அந்தோனியப்பா பிச்சம்மாள்

**லூர்து மாதா**

38. ஃபிலோ கோமஸ்
39. ஜெனோ சேவியர்
40. ரம்யா
41. ரோஸ்லின் தாமஸ்
42. சான்டினா
43. ஆலிவர் வி.ராயன்

**மணல் மாதா**

44. கெயிட்டன் ஃபர்னான்டோ
45. ரொசாரி கோமஸ்

**மிக்கேல் அதிதூதர்**

46. எல்சிட்டா

**பனிமய அன்பியம்**

ஒருவருமில்லை

**பவுலடியார்**

47. லீமாரோஸ் ஜாய்
48. ராஜா ரோஸ்லின்
49. ரஸ்கின் வசந்தா

**பரிபூரணமாதா**

50. ஜெனிஷா
51. மெடோனா

**பொம்பெயி மாதா**

52. மாத்யூ கர்டோசா
53. ஜான்சிராணி
54. டிஃபானி அண்டோ
55. டெரிக்
56. இம்மாக்குலேட்

**இராயப்பர்**

57. ஷைனி
58. டெய்சி

**சவேரியார்**

59. டெலிலா அமலன்
60. அண்டன் சகாயம்
61. ஆரோக்கியராஜ் ஹெலினா
62. ஜோர்னல் ஜென்சி
63. அனுஷ்யா பீட்டர்

**செபஸ்தியார்**

64. ஜெசிலா சேவியர்
65. பிரவீனா

**சிந்தாத்திரை மாதா**

66. நேசம்
67. மெடோனா ஜோசப்

**சிறுமலர் அன்பியம்**

68. எல்சிட்டா ஆனந்தன்
69. செலஸ்டின்
70. விஜி சகாயராஜ்

**சூசையப்பர்**

71. கிறிஸ் ரிஜோ
72. ரூபி கொர்னேலியுஸ்
73. மென்சி

**திருச்சிலுவை**

74. கைத்தான் ரமணி
75. கில்டன் சரோலின்

**வியாகுல மாதா**

76. ராஜா ஜரின்
77. கெலிண்டன்

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 57

### பரிசு பெறுபவர்கள் : 4

1. திண்டுக்கல் **ரொசாலி**
2. தூத்துக்குடி காந்திநகர் **ஷாந்தினி**
3. திருச்சி **ஜான்சிராணி**
4. புதியம்புத்தூர் **ஹெலன் அன்னமணி**

### பாராட்டுக்குரியவர்கள் : 53

**ஆலந்தலை**
78. ஃபொன்சேகா
79. மரியம்மாள்
80. சகாயராணி
81. சுதா ஜெயிற்றன்
82. மேரி லோபோ

**வீரபாண்டியன்பட்டணம்**
83. ஆன்ட்ரின் சில்வேரா
84. ஷாந்தினி

**ஆறுமுகனேரி**
85. தொம்மை அந்தோனி

**சேதுக்குவாய்த்தான்**
86. ஞானம் பாலசிங்

**புதியம்புத்தூர்**
87. ஹெலன் அன்னமணி

**சென்னை**
88. கமலஜோதி ஜெயசீலன்
89. ஒஃபிலியா தாமஸ்
90. சகாயராணி

**பாளையங்கோட்டை**
91. பிரேமா குணசீலன்
92. டெனிசா ஃபர்னான்டோ

**கயத்தாறு**
93. அமல்ராஜ்

**பெரியகுளம்**
94. குழந்தை தெரஸ்

**திண்டுக்கல்**
95. ரொசாலி
96. மரிய மதலேன்
97. ஜெர்மேன்

**கோயம்புத்தூர்**
98. பிரான்சிஸ் ஆர்லன்
99. சகோ. லூக்காஸ்

**சேலம்**
100. சூசைராஜ்

**திருமானூர், கும்பகோணம்**
101. பீட்டர்

**திருச்சி**
102. மோனிட்டா கிறிஸ்டி
103. மேத்யூ விவேக்
104. டோனி
105. ஜான்சிராணி

**மதுரை**
106. சகோ. அப்போலின்

**வடக்குத்து**
107. ஹென்றிதாஸ்

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
108. பெனிட்டா
109. சுசீலன்
110. ரமோலா கமிலஸ்
111. ரிமோல்டா
112. ஜூலியட் வாஸ்

**குருஸ்புரம்**
113. ஜான்சி மென்டிஸ்
114. தமிழ்ச் செல்வன்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
115. சுகிர்தா

**யூதா ததேயு கோவில்**
116. ரோஸ் சேவியர்
117. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்

**காந்திநகர்**
118. சாந்தினி
119. ரியாலினோ
120. பேபி வால்டர்
121. அன்சிட்டா

**லூர்தம்மாள்புரம்**
122. ரெனிஸ்டன் ஜெர்லின்

**சார்லஸ் கோவில்**
123. சகாயிற்றா மச்சாது

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
124. வினிஃப்ரட் பிரின்ஸ்டன்
125. செக்கரியா சாமுவேல்
126. லிஜியா ஃபர்னான்டோ
127. ஜெசிந்தா ஃபர்னான்டோ

**இஞ்ஞாசியார்புரம்**
128. அற்புத செல்வி

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
129. விர்ஜின்

**அந்தோனியார் கோவில்**
130. மென்சிலா லொயோலா



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 149**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 138**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 38)

## செப்டம்பர் - 2022

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி பால் ரோமன் | 94889 42202 |
| களப் பணியாளர் | : | சகோதரர் பெல் கிளிண்டன் | 9345816875 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|---|
| காலை | 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை 5.00, 6.30, 8.00 | திருப்பலி |
| மாலை | 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை 9.30 | ஆங்கிலத் திருப்பலி |
| | | மாலை 5.30 | திருப்பலி | மாலை 5.30 | திருப்பலி |
| | | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை 6.30 | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்

உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.30 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.

## பனிமயச் சுவடுகள்

**(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)**

382. பனிமயத் தாயின் 440ஆம் ஆண்டுப் பெருவிழாக் **கொடியேற்றம்** 26.07.2022 அன்று காலையில் மேதகு **ஆயர் ஸ்டீபன்** அவர்களால் நடைபெற்றது. தமிழக சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன், மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறைக் கண்காணிப்பாளர், மாநகர மேயர் ஆகியோர் கொடியேற்றத்தைக் கண்டு களித்தனர்.

383. பெருந்தொற்றின் காரணமாக இரண்டு ஆண்டு இடைவெளிக்குப் பின், **நற்கருணைப் பவனி** 31.07.2022 ஞாயிறு அன்று நடைபெற்றது. தொடர்ந்து, ரோச் வளாகத்தில் நடைபெற்ற நற்கருணை ஆசீரில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

384. பனிமயத் தாயின் பெருவிழா **மாலை ஆராதனை** 04.08.2022 இரவிலும், பெருவிழாத் **திருப்பலிகள்** 05.08.2022 வெள்ளி அன்றும் நடைபெற்றன. மேதகு ஆயர்கள் ஸ்டீபன், இவோன் அம்புரோஸ், அந்தோனிசாமி (பாளையங்கோட்டை மறைமாவட்டம்) மூவரும் மூன்று திருப்பலிகளுக்குத் தலைமையேற்றனர். இரவில் சப்பரப் பவனி நடைபெற்றது. இவை அனைத்திலும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

385. தூத்துக்குடி மறைமாவட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அடுத்த ஆண்டு பெருவிழாவின்போது (05.08.2023 முதற் சனி) பனிமய அன்னையின் **தங்கத் தேர்** 16ஆவது முறையாக வலம் வரும் என்ற அறிவிப்பை மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்கள் பெருவிழாத் திருப்பலியின் நிறைவில் பலத்த ஆர்ப்பரிப்பின் நடுவே வெளியிட்டார்கள்.

386. **இறையடியார்கள்** அந்தோனி சூசைநாதர், அகுஸ்தின் பெரைரா இருவரின் திருவுருவப்படங்களும் பங்கின் இல்லங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு **1000 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு** கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் தொடங்கப்பட்டது, ஆயிரம் நாள் நிறைவடைந்து, கடந்த 13.08.2022 சனி மாலையில் பேராலயத்தில் திருவுருவப் படம் பவனியாகக் கொண்டுவரப்பட்டு நிறைவு நன்றி வழிபாடு நடத்தப்பட்டது. மறுநாள் இறையடியார்களின் திருவுருவப்படம் பரிசுத்த அமலோற்ப மாதா வாலிபர் சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இனி தொடர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் இறையடியார்களுக்கான சிறப்பு மன்றாட்டு பேராலயத்தில் ஏறெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

387. பேராலயப் பங்கின் **இளையோருக்கான திருப்பலி** 14.08.2022 ஞாயிறு அன்று கொண்டாடப்பட்டது. தொடர்ந்து, இளையோருக்கான கூட்டம் உதவிப் பங்குத் தந்தை பால் ரோமன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

388. இந்திய நாட்டின் **75ஆவது விடுதலைப் பெருவிழா** 15.08.2022 அன்று பங்கில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இரண்டாம் திருப்பலியின் நிறைவில் நாட்டுக் கொடியேற்றப்பட்டது. சிறப்பு நிகழ்வாக சுதந்திரக் கொடி பேராலயத்தின் மேல் மண்டபத்தில் மூன்று நாள் பறக்கவிடப்பட்டது.

389. பனிமயப் பாசறை (85) கடந்த 16.08.2022 செவ்வாய் மாலை **"விடுதலை வாழ்வு"** என்னும் தலைப்பில் அந்தோனியார் அரங்கில் நடைபெற்றது. 25 பேர் கலந்துகொண்டனர்.

390. பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழுவின் 8ஆவது கூட்டம் 19.08.2022 வெள்ளி மாலை 07.30 மணிக்குப் பங்குத் தந்தையின் தலைமையில் நடைபெற்றது. பெருவிழாவின் வரவு-செலவு அறிக்கை பொருளாளரால் வாசிக்கப்பட்டது. பெருவிழாப் பணிக்குழுக்களில் சிறப்பாகச் செயல்பட்டவர்களுக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

391. பனிமயத் தாயின் 440ஆம் ஆண்டுப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றதற்கு நன்றியாக, 20.08.2022 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (22)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. "பனிமய அன்னைப் பெருவிழா ஆசீர்வாதங்களுக்கு நன்றியாக"வும், பெருவிழா உபகாரிகளின் ஆசிகளுக்காகவும், சிறப்பு தேவைகளுக்காக மன்றாடக் கேட்டுக்கொண்டவர்களுக்காகவும் வேண்டுதல்கள் எழுப்பப்பட்டன.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 109. | ஜோசஸ் | ரமேஷ் - டியூமா | 24.07.2022 | காவல்தூதர் |
| 110. | ஜோஸ்வா | ரமேஷ் - டியூமா | 24.07.2022 | காவல்தூதர் |



### *வாழ்த்துகின்றோம்*

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | புதுநன்மை நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 113. | மேரி ரோஷினி | அன்டோ- ரதராணி | 31.07.2022 | அன்னை வேளாங்கண்ணி |
| 114. | மெஃபினா | ரெடாப்டர் - நிஷ்மா | 31.07.2022 | ஜூடு |
| 115. | மேக்சன் | கியூபர்ட் - ஃபுளோரிடா | 31.07.2022 | ஜூடு |
| 116. | ஜோசஸ் | ரமேஷ் - டியூமா | 31.07.2022 | காவல் தூதர் |
| 117. | ஜோஸ்வா | ரமேஷ் - டியூமா | 31.07.2022 | காவல் தூதர் |
| 118. | பீட்டர்சென் | ஆண்ட்ரூ- டயானா | 31.07.2022 | மணல் மாதா |
| 119. | அனால் | ஆண்ட்ரூ- டயானா | 31.07.2022 | மணல் மாதா |
| 120. | லூர்துசன் | லூயிஸ் - அஜந்தா | 31.07.2022 | மணல் மாதா |
| 121. | ஜெசி சிபிக்ஷா | கிறிஸ்டின் - லின்சி | 31.07.2022 | மிக்கேல் தூதர் |
| 122. | ஜெஃப்ரி ஆரோன் | கிறிஸ்டின் - லின்சி | 31.07.2022 | மிக்கேல் தூதர் |
| 123. | ஜெரோம் ஹிலாரியோன் | தயாளன் - ஜொஷிலா | 31.07.2022 | திருச்சிலுவை |



### ஆசி கூறுகின்றோம்

## 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | திருமணநாள் |
|---|---|---|---|
| 99. | மார்டின் ரிஜாய் - கரோலின் சஜி | தஸ்நேவிஸ் | 29.08.2022 |



### இறைவனைப் போற்றுகிறோம்

## 4. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 25. | ஜெஸ்மின் | பாஸ்கர் | 12.08.2022 | சவேரியார் |



### செபிக்கின்றோம்

## 5. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 129. | செல்வராஜ் பர்னாந்து | ஜெரி | 07.08.2022 | குழந்தை இயேசு |
| 130. | ரீட்டா பெர்னாண்டோ | பூபதி | 12.08.2022 | திருச்சிலுவை |
| 131. | ஜெஸ்மின் | பாஸ்கர் | 17.08.2022 | சவேரியார் |

## நடைபெற இருப்பவை

★ 01.09.2022 வியாழன் அன்று மாலைத் திருப்பலி முடிந்ததும், நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு **திருமணி ஆராதனையும், நற்கருணை ஆசீரும்** நடைபெறும். தொடர்ந்து, ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்படும்.

★ 02.09.2022 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

★ 03.09.2022 **முதல் சனியன்று மாலைத் திருப்பலி**யும், சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். அவை நமது ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா தொலைக்காட்சியிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

★ 17.09.2022 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (23)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை “உயர்கல்வி மாணவரின் ஆசீர்வாதங்களுக்காக” நடைபெறும்.



## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண் | நாள் - கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|
| 91. | 06.09.2022 செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | ஆவியின் வரம்: **திடம்** |
| 92. | 13.09.2022 செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | ஆவியின் வரம்: **ஞானம்** |
| 93. | 20.09.2022 செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | ஆவியின் வரம்: **பக்தி** |
| 94. | 27.0892022 செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் மைக்கேல் | ஆவியின் வரம்: **இறையச்சம்** |
| 95. | 04.10.2022 செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | ஆவியின் வரம்: **இறைவேண்டல்** |



# பனிமய சாட்சியம்

**பனிமய சாட்சியம் : 62**

## தினேஷ் – டி. சவேரியார்புரம்

பனிமய அன்னையின் பெருவிழா நாள்களில் தூத்துக்குடி சவேரியார்புரத்தைச் சேர்ந்த திரு. தினேஷ் அன்னைக்கு ஒரு வெள்ளி செபமாலையைக் காணிக்கையாகக் கொண்டுவந்தார். கடந்த 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜெபாவுடன் திருமணம் நடந்தது. தினேஷ் அவரது பெற்றோருக்கு 6 ஆண்டுகள் கழித்துப் பிறந்த குழந்தையாம். எனவே, தனக்குத் தாமதமின்றிக் குழந்தை பாக்கியம் வேண்டும் என்று பனிமயத் தாயிடம் மன்றாடியிருக்கிறார். பனிமயத் தாயின் பரிந்துரையால் 2020 ஆகஸ்ட் மாதம் ஜாய்ஸ்லின் டாலினா என்னும் மகள் பிறந்து மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளாள். எனவேதான், இந்த வெள்ளி செபமாலையை நன்றிக் காணிக்கையாக அன்னைக்கு ஒப்புக்கொடுத்துள்ளனர் தினேஷ்-ஜெபா தம்பதியர். பனிமய அன்னையே வாழ்க!

# 1st YEAR REMEMBRANCE

*In Ever Loving Memory of*

# C.P.R. REZANTH RODRICO

*(Southern Land - Chennai)*

**05.04.1984 - 23.09.2021**

**Age : 37**



இறைவா இவருக்கு நித்திய இளைப்பாற்றி அளித்தருளும்.
முடிவில்லா ஒளி இவர்மேல் ஒளிரச் செய்தருளும்.

இதைக் காணும் யாவரும்
இவரது இளைப்பாற்றிக்காக பிரார்த்திக்கவும்.

பிரிவால் வருந்தும்

| | | | |
|---|---|---|---|
| தந்தை | : P. RAJAN RODRIGO | மனைவி | : R. ELGIN FDO |
| தாய் | : R. CAMY RODRIGO | மகன்கள் | : R. HEZAL RODRIGO |
| சகோதரன் | : R. REYON RODRIGO | மகள் | : R. SHAIRLY RODRIGO |
| சகோதரி | : R. RUBINI RODRIGO | | |

"உங்கள் பொருட்டுக் கடவுளுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்த
நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்."

(2 தெச 1:3)



# துறவறப் பொன்விழா வாழ்த்துகள்!

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால்
அற்புதக் கெபியரசா் வீற்றிருக்கும் ஆலந்தலை பங்கில் பிறந்து,
1972ஆம் ஆண்டு
மரியாவின் பிரான்சிஸ்கு மறைபோதக சபையில் (FMM) இணைந்து
தமது அருள்பணி வாழ்வில் 50 ஆண்டுகளை நிறைவுசெய்யும்

எங்கள் குடும்பத்தின் பாசமலர்



## அருள்சகோ. ரொசாரியோ FMM

(ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி, சென்னை)

அவர்களை வாழ்த்துகிறோம்.
இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

### நன்றித் திருப்பலிகள்

| | |
|---|---|
| மடிப்பாக்கம், புனித லூர்து அன்னை ஆலயம் | 30.09.2022 காலை 11.00 |
| ஆலந்தலை, அற்புதக் கெபி | 30.09.2022 காலை 06.00 |
| தூத்துக்குடி, பனிமய அன்னை பேராலயம் | 10.10.2022 மாலை 05.30 |

இவண்

உடன்பிறப்புகள்

பொன்சேகா தங்கராஜ் குடும்பத்தினர்
கமலஜோதி ஜெயசீலன் குடும்பத்தினர்
கஸ்மீர்ராஜா ராஜகுமாரி குடும்பத்தினர்
பிரேமா குணசீலன் குடும்பத்தினர்
அருள்பணி. குமார்ராஜா

விண்ணிலிருந்து பெற்றோர்
அகஸ்டின் ஃபெர்னான்டோ - சிறிய புஷ்பம் டிரோஸ்

# விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி

"நீதியுள்ள ஆண்டவர்தம் திருமுகத்தை நேர்மையாளர்கள் காண்பர்"

(திபா 11:7)



மண்ணில்
08.07.1919
விண்ணில்
22.09.2005

மண்ணில்
15.11.1926
விண்ணில்
30.04.2018

## இ. பி. ராயர் இசபெல் கர்டோசா

கண் முன்னே நீங்கள் வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் நிழலாடும்

மண்விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கி சென்றாலும் - மனக்
கண் விட்டு மறையாமல்
காலமெல்லாம் இருப்பீர்கள்!

**இறைவா, என்றும் எம் அன்பு பெற்றோர் உம் திருநிழலில் பேரின்பம் காண இறைஞ்சுகின்றோம்.**

*நீங்கா நினைவில்*

மக்கள், மருமக்கள், பேத்திகள், பேரன்கள்,
பூட்டிகள், பூட்டன்கள்

SHINY Ph : 98421 31493